පළාත් අධ්‍යාපන දෙපාර්තමේන්තුව - උතුරු මැද පළාත
மாகாணக் கல்வித் திணைக்களம் - வட மத்திய மாகாணம்
DEPARTMENT OF EDUCATION – NORTH CENTRAL PROVINCE

| தரம் |
|---|
| 08 |

ஆண்டிறுதிப் பரீட்சை – 2023
பாடம்:- தமிழ் மொழியும் இலக்கியமும் - I, II

பாடசாலையின் பெயர்:- ………………………………………….
சுட்டெண்:- ………………………  நேரம் :- 2.00 மணித்தியாலம்

## பகுதி – I

- ❖ எல்லா வினாக்களுக்கும் விடை தருக.
- ❖ மிகப் பொருத்தமான விடையின் கீழ்க் கோடிடுக.

01. ஆபுத்திரன் மதுரையில் மாசற்ற மனைகளில் பிச்சை எடுத்தான் **மாசற்ற** என்பது.
  1. தூய்மையற்ற  2. குற்றமற்ற  3. தாழ்வில்லாத  4. உயர்ந்த

02. அல்லும் எல்லும் பொல்லாங்கு செய்கிறார் **அல்** என்பது.
  1. பகல்  2. நெல்  3. இரவு  4. சூரியன்

03. எனது கலக்கத்தை சாம்பவியிடமே சொல்லிக்கொள்கிறேன். **கலக்கம்** என்பதன் எதிர்ப்பதம்.
  1. துணிவு  2. தெளிவு  3. விளக்கம்  4. மயக்கம்

04. சுதந்திர பானு உதித்ததிங்கே என்பதில் இடம்பெறும் அணி.
  1. உவமை அணி  2. உயர்வு நவிற்சி அணி
  3. உருவக அணி  4. தன்மை நவிற்சி அணி

05. ஐயம் தீர வழிகாண். **ஐயம்** என்பது.
  1. பயம்  2. வழி  3. சந்தேகம்  4. கனவு

06. இளையவன் எனும் சொல்லின் எதிர்ப்பாற்சொல்.
  1. இளையவள்  2. இளையாள்  3. முதியவன்  4. இளை

07. நெல்லின் இளையது நாற்று பனையின் இளையது.
  1. வடலி  2. பிள்ளை  3. கன்று  4. குட்டி

08. அரசன் பகைவனை கண்டதுண்டமாக வெட்டினான். இங்கு **கண்ட துண்டமாக** என்பது.
  1. இரட்டைக்கிளவி  2. அடுக்குத்தொடர்
  3. அடுக்கிடுக்குத்தொடர்  4. இணைமொழி

09. பின்வருவனவற்றுள் ஆக்கப்பெயர்.
  1. நான்  2. இருசுடர்  3. புத்திசாலி  4. நீர்வீழ்ச்சி

10. பின்வருவனவற்றுள் காரண இடுகுறிப்பெயருக்கு உதாரணம்.
  1. முள்ளி  2. மண்வெட்டி  3. மலை  4. மரம்

11. உயிர்மெய் நெட்டெழுத்து அல்லாதது.
  1. கா  2. மா  3. ஆ  4. பா

12. ஓடிய மாணவன் தடுக்கி விழுந்தான் இங்கு ஓடிய என்பது.
  1. வினைச்சொல்  2. பெயரெச்சம்  3. வினையெச்சம்  4. குறிப்புவினை

13. பின்வருவனவற்றுள் பொருள் வேறுபடும் சொல்.
  1. அல்லல்  2. நல்குரவு  3. இடும்பை  4. இன்னல்

14. (Telegram) டெலிகிராம் என்பதன் தமிழ் வடிவம்.
  1. கைத்தொலைபேசி  2. தொலைகிராம்  3. தந்தி  4. தொலைநகல்

15. கவியிற் சிறந்தவன் கம்பன் என்பதில் இடம்பெறும் வேற்றுமைப் பொருள்.
  1. நீங்கல்  2. ஒப்பு  3. எல்லை  4. ஏது

16. பின்வருவனவற்றுள் திரிதல் விகாரத்திற்கு உதாரணமாய் அமைவது.
  1. கடற்கரை  2. மரவேர்  3. வாழைக்குலை  4. கார்மேகம்

17. நல்ல இளனியை நறுக்கி வீழ்த்தினாய் **இளனி** என்பதன் எழுத்து வடிவம்.
   1. இளனீர் 2. இளநீர் 3. இளணீர் 4. இளணீ

18. ஓடினான் எனும் வினைச்சொல்லின் இறந்தகால இடைநிலை.
   1. ஓடு 2. ன் 3. இன் 4. ஆன்

19. மூக்கொலிகள் என அழைக்கப்படுபவை.
   1. ய்,ர்,ல்,வ்,ழ்,ள் 2. க்,ச்,ட்,த்,ப்,ற் 3. ங்,ஞ்,ண்,ந்,ம்,ன் 4. ஆ,ஈ,ஊ,ஏ,ஐ,ஓ,ஔ

20. கரியன் என்பது.
   1. குறிப்புவினை 2. தெரிநிலைவினை 3. கூட்டுவினை 4. எச்சவினை

(40 புள்ளிகள்)

## பகுதி – II

❖ முதலாம் இரண்டாம் வினாக்கள் உட்பட எல்லாமாக ஐந்து வினாக்களுக்கு விடை எழுதுக.

01. பின்வரும் தலைப்புக்களுள் ஒன்றைத் தெரிவுசெய்து 200 சொற்களில் அமையுமாறு கட்டுரை எழுதுக.

   1. உயிர்கள்மீது இரக்கம் காட்டுவோம்
   2. நீரின் பயன்கள்
   3. பழைய புத்தகம் ஒன்றின் சுயசரிதை
   4. நான் கண்டு கழித்த கண்காட்சி

(20 புள்ளிகள்)

02. பிறந்தநாள் விழா ஒன்றிற்கான அழைப்பிதழ் ஒன்று தயாரிக்குக.

(10 புள்ளிகள்)

03. பின்வரும் பந்தியை வாசித்து அதன் கீழ்த் தரப்பட்டுள்ள வினாக்களுக்கு விடை தருக.

மொழியின் வளர்ச்சி நமது வாழ்க்கை வளர்ச்சியைப் பொறுத்தது. இம்மொழி வளர்ச்சிக்கு சொல்லின் வளர்ச்சி ஓர் சிறந்த அறிகுறியாயுள்ளது. நமது வாழ்க்கை வளமுறுவதனால் சொற்கள் பெருகிக்கொண்டுதான் செல்லும். அகராதி வேலைக்கும் முடிவில்லை. குறைபாடுகளைத் திருத்துவதும், சொற்களுக்கு ஜாதகம் கணிப்பதும் புதுச்சொற்களை சேர்ப்பதும், சாத்திர சங்கீதமொழி – அகராதிகளையும், இயற்றுவதும் தமிழ் மொழி வளர்ச்சிக்கு இன்றியமையாத பெருஞ் செயல்களாகும். இவ்வேலைகள் இடையீடின்றி நடைபெறுவதற்குரிய முயற்சியை நாம் மேற்கொள்ள வேண்டும். தமிழ் மக்கள் உள்ளம் இதிலே செல்லுவதாக!

அ. சொற்களின் பெருக்கம் எதனை எடுத்துக்காட்டுகின்றது?

ஆ. இங்கு முடிவில்லாத வேலையாக குறிப்பிடப்படுவது யாது?

இ. தமிழ் மொழியின் வளர்ச்சிக்கு இன்றியமையாத பெருஞ் செயல்கள் எவை?

ஈ. தமிழ் மக்கள் உள்ளத்தில் இருக்கவேண்டிய விடயம் யாது?

உ. பொருள் தருக.

   1. ஜாதகம் -
   2. இடையீடு –

(10 புள்ளிகள்)

04. பாடநூலை வைத்து பின்வரும் வினாக்களுக்கு விடை தருக.

அ. நாட்டார் பாடல்கள் வேறு எப்பெயர்களால் அழைக்கப்படும்?

ஆ. குமணவள்ளல் ஆட்சிசெய்த நாடு எது?

இ. விநோதக்கனவு யாரால் எழுதப்பட்டது?

ஈ. ‘சொல்லின் இசை’ எனும் கட்டுரையில் இடம்பெறும் பழமொழிகள் 2 தருக.

உ. இஸ்லாமிய தமிழ் இலக்கிய மாநாடுகள் நடைபெற்ற இடங்கள் 4 தருக.

(10 புள்ளிகள்)

05. பின்வருவனவற்றைக்கொண்டு வாக்கியம் அமைக்குக.

1. கண்ணீரும் கம்பலையும்
2. குரங்குப்பிடி
3. மலரும் மணமும்போல
4. படபட
5. மெல்ல மெல்ல

(10 புள்ளிகள்)

06. பின்வரும் வாக்கியங்களில் இடம்பெறும் வேற்றுமை, வேற்றுமை உருபு, வேற்றுமைப்பொருள் என்பவற்றை அட்டவணைப்படுத்துக.

அ. அரசன் நாட்டை அடைந்தான்

ஆ. பகைவன் வாளால் வெட்டினான்

இ. சிறுவன் தந்தையோடு சென்றான்

ஈ. இராமனுக்குத் தம்பி பரதன்

உ. ரொட்டிக்கு மா பிசைந்தாள்

(10 புள்ளிகள்)

07. பின்வரும் வினாக்களுக்கு விடை தருக.

அ. வினையாலணையும் பெயருக்கு உதாரணம் 2தருக.

ஆ. ஒத்தபொருள் கொண்டமைந்த இணைமொழிகள் 4 தருக.

இ. வினைச்சொல்லின் இயல்புகள் 2 தருக.

ஈ. இறந்தகால இடைநிலைகள் உதாரணங்களுடன் 2 தருக.

உ. பின்வரும் பாடலடிகளை நியமத் தமிழில் எழுதுக.

1. இடுப்பொடிஞ்சி நிக்கயில
2. பெத்த தாயே நா மறந்தேன்.

(10 புள்ளிகள்)

ஆண்டிறுதிப் பரீட்சை – 2023
தமிழ் மொழியும் இலக்கியமும்
தரம் - 8
விடைகள்

பகுதி – I

| | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | - | 2 | 6 | - | 1 | 11 | - | 3 | 16 | - | 1 |
| 2 | - | 3 | 7 | - | 1 | 12 | - | 2 | 17 | - | 2 |
| 3 | - | 2 | 8 | - | 4 | 13 | - | 2 | 18 | - | 3 |
| 4 | - | 3 | 9 | - | 3 | 14 | - | 3 | 19 | - | 3 |
| 5 | - | 3 | 10 | - | 1 | 15 | - | 4 | 20 | - | 1 |

பகுதி – II

03. அ. மொழியின் வளர்ச்சியை

ஆ. அகராதி வேலை

இ. குறைபாடுகளைத் திருத்துதல், சொற்களுக்கு ஜாதகம் கணித்தல், புதிய சொற்களைச் சேர்த்தல்.

ஈ. அகராதி வேலை இடையீடின்றி நடைபெறும் முயற்சியை மேற்கொள்ளல்

உ. சோதிடம், தடை

04. அ. வாய்மொழிப்பாடல், கிராமியப்பாடல், மக்கள் கவிதைகள்

ஆ. முதிரம்

இ. ஏஸ்.வி.லூயிஸ் ராஸன்

ஈ. காற்றுள்ளபோதே தூற்றிக்கொள், கிட்டாதாயின் வெட்டென மற, யானைவரும் பின்னே மணியோசைவரும் முன்னே.

உ. மருதமுனை, திருச்சி, சென்னை, கொழும்பு, கீழ்க்கரை

06. அ. இரண்டாம் வேற்றுமை – செயப்படுபொருள் - ஐ – அடைதல்

ஆ. மூன்றாம் வேற்றுமை – கருவி வேற்றுமை – ஆல் - கருவி

இ. மூன்றாம் வேற்றுமை – உடநிகழ்ச்சி வேற்றுமை – ஓடு – உடனிகழ்ச்சி

ஈ. நான்காம் வேற்றுமை – கொடை வேற்றுமை – கு – உறவு

உ. நான்காம் வேற்றுமை – கொடை வேற்றுமை – கு – முதற்காரணம்

07. அ. வந்தவன், விழுந்தவன், பாடியவன், ஆடியவன்

ஆ. ஏழை எளியவர், ஈவிரக்கம், அண்டை அயல், சீரும் சிறப்பும்

இ. செயலை உணர்த்தும், காலம் காட்டும், வேற்றுமை ஏற்காது

ஈ. த் - படித்தான், (த், ட், ற், ன், இன்)

ட் - உண்டான்

ற் - கற்றான்

ன் – போனான்

உ. 1. இடுப்பொடிந்து நிற்கையில்

2. பெற்ற தாயை நான் மறந்தேன.

# LOL.lk
# BookStore

# විභාග ඉලක්ක
# පහසුවෙන් ජයගන්න

ඕනෑම පොතක් ඉක්මනින්
නිවසටම ගෙන්වා ගන්න






| කෙටි සටහන් | පසුගිය ප්‍රශ්න පත්‍ර | වැඩ පොත් | සඟරා | O/L ප්‍රශ්න පත්‍ර | A/L ප්‍රශ්න පත්‍ර | අනුමාන ප්‍රශ්න පත්‍ර | අතිරේක කියවීම් පොත් | School Book | ගුරු අත්පොත්

pesuru Prakashana Private Ltd. | Akura Pilot | සමනල දැනුම | T | සතර

පෙර පාසලේ සිට උසස් පෙළ දක්වා සියළුම ප්‍රශ්න පත්‍ර,
කෙටි සටහන්, වැඩ පොත්, අතිරේක කියවීම් පොත්, සඟරා
සිංහල සහ ඉංග්‍රීසි මාධ්‍යයෙන් ගෙදරටම ගෙන්වා ගැනීමට

**www.LOL.lk වෙබ් අඩවිය වෙත යන්න**